**மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மற்றும் மாற்றுத்திறனாளிகள்நல இயக்குநர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள், சென்னை—5.**

**முன்னிலை: திரு.ஜானி டாம் வர்கீஸ், I.A.S.,**

செ.மு.ந.க.எண்.5426/நிர்—2/2020 நாள்.20.08.2020

பொருள்: பணியமைப்பு – மாற்றுத்திறானளிகள் நல ஆணையரகம் – சென்னை – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV ல் தேர்வு செய்யப்பட்டு தருமபுரி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் தட்டச்சராகப் பணிபுரிந்து வரும் திருமதி. சோ.தென்றல் நாயகி என்பவருக்கு பணிவரன் முறை மற்றும் தகுதிகாண் பரும் முடித்து ஆணையிடப்படுகிறது.

பார்வை: 1. இவ்வாணைரயக இதே செ.மு.ந.க.எண்.1297/நிர்.2/2018 நாள்.26.08.2018

--------

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் ( 2015—2016) தொகுதி IV ல் தேர்வுச்செய்யப்பட்டு பார்வையில் காணும் இவ்வாணையரக செயல்முறை ஆணையின்படி, தருமபுரி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் தட்டச்சராகப் பணிபுரியும் திருமதி. சோ.தென்றல் நாயகி என்பவரது பணியினை தற்காலிக பணியமைப்பு விதிகளின் படி தமிழ்நாடு அரசு ஊழியர்களின் (வரையறுக்கப்பட்ட பணிகள் ) விதி 2016 ன் பிரிவு 28(1) ன்படி தட்டச்சர் பதவியில் 01.03.2018 மு.ப பணிவரன்முறை செய்யப்பட்டது. பணிவரன் முறை செய்யப்பட்டதை தொடர்ந்து தகுதிகாண் பருவ காலமான மூன்றாண்டு தொடர் பணி காலத்தில் இரண்டாண்டினை 29.02.2020 பிற்பகல் அன்று திருப்திகரமாக முடித்தார் என்றும் ஆணையிடப்படுகிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர்களின் ( வரையறுக்கப்பட்ட பணி நிபந்தனைகள் சட்டம் ) 2016 ன் பிரிவு 28(1) ன்படி அன்னார் காலமுறை ஊதிய உயர்வு பெறத் தகுதியுடையவராகிறார் என்றும் ஆணையிடப்படுகிறது.

உரிய பதிவுகள் தனியரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

இணைப்பு—பணிப்பதிவேடு

20.08.2020

மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மற்றும்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்

20/8/2020

பெறுநர்

திரு. சோ.தென்றல் நாயகி,
தட்டச்சர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள நல அலுவலகம்,
தருமபுரி.

நகல்

1. மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்,
   மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், தருமபுரி.
2. இ.கோ/ உதிரி.